பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

17 06 2025 TUESDAY 7.15 PM

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

- கனடாவில் நடைபெறும் ஜி-7 உச்சிமாநாட்டில் பிரதமர் திரு நரேந்திர மோடி இன்றிரவு பங்கேற்கிறார்.
- உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்கான நாட்டின் மிகப்பெரிய பல்வகை சரக்கு முனையத்தை ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் இன்று ஹரியானா மாநிலம் மானேசரில் தொடங்கிவைத்தார்.
- அமர்நாத் யாத்திரைக்கான பாதுகாப்பு முன்னேற்பாடுகள் குறித்து மத்திய உள்துறை செயலர் திரு கோவிந்த் மோகன் தலைமையில் இன்று உயர்மட்ட ஆலோசனை நடைபெற்றது.
- இஸ்ரேல் தாக்குதலை நிறுத்தாவிட்டால் பெரிய அளவில் பதில் தாக்குதல் நடத்தப்போவதாக ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது.
- தைவானில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் வைதேகி சௌத்ரி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

--இனி விரிவான செய்திகள்--

<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, இன்றிரவு கனடாவின் Kananaskis–ல் நகரில் நடைபெறும் ஜி-7 உச்சிமாநாட்டில் பங்கேற்கிறார்.

எதிர்காலத்திற்கான எரிசக்தி பாதுகாப்பு, தொழில்நுட்பம், உள்கட்டமைப்பு, முதலீடுகள் உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்து ஜி-7 நாடுகளின் தலைவர்கள் இம்மாநாட்டில் விவாதிக்க உள்ளனர்.

மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப புதிய திட்டங்களை செயல்படுத்துவது குறித்தும் அவர்கள் ஆலோசிக்க உள்ளனர்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தொடர்ந்து ஆறாவது முறையாக ஜி-7 உச்சிமாநாட்டில் பங்கேற்றுள்ள நிலையில், உறுப்பு நாடுகளின் தலைவர்களுடன் பொருளாதார ஒத்துழைப்பு, வர்த்தகம் பாதுகாப்பு உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்து பேச்சு நடத்தவுள்ளார்.

உலகளாவிய பிரச்சினைகள் குறித்து சர்வதேச அமைப்புகளின் தலைவர்களுடனும் பிரதமர் பேச்சு நடத்த உள்ளார்.

கனடா பிரதமர் திரு மார்க் கார்னி-யுடனும் முக்கிய விஷயங்கள் குறித்து பிரதமர் பேச்சு நடத்தவுள்ளார்.

<<<<<<>>>>>>

நாட்டின் வளர்ச்சியை உறுதி செய்யும் வகையில் கடல்சார் பொருளாதாரம் முதல், விண்வெளி பொருளாதாரம் வரை இளைஞர்களுக்கான வாய்ப்புகள் பெருகி வருவதாக குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தில் இன்று மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இடையே கலந்துரையாடிய திரு தங்கர், புத்தாக்க தொழில்களின் வளர்ச்சியின் மீது அக்கறை செலுத்த வேண்டும் என்று தெரிவித்தார்.

சிறுதொழில் வளர்ச்சியில் உலகின் முன்னோடியாக இந்தியா திகழ்கிறது என்று அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் தேசிய கல்விக்கொள்கை உலகிலேயே மிகவும் சிறந்தது என்று கூறிய திரு தங்கர், பல படிப்புகளை ஒரே நேரத்தில் மாணவர்கள் கற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளையும் அளித்துள்ளதாக தெரிவித்தார்.

இதுவரை தேசிய கல்விக்கொள்கையை ஏற்றுக்கொள்ளாத மாநிலங்கள், அதன் முக்கியத்துவத்தை புரிந்துகொண்டு அதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

உலக அளவில் தொழில்நுட்பம் மிக விரைவாக வளர்ந்து வருவதை சுட்டிக்காட்டிய திரு ஜெக்தீப் தங்கர், செயற்கை நுண்ணறிவு, இயந்திரவியல் கற்றல், Block Chain போன்ற தொழில்நுட்பங்களை உலகத்தரத்திற்கு கொண்டுவருவதற்கான முயற்சிகளையும் இந்தியா எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

பசுமை எரிசக்தி இயக்கத்தையும் ஊக்கப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இந்தியா எடுத்து வருவதாகவும் திரு ஜெக்தீப் தங்கர் கூறினார்.

<<<<<<>>>>>>

உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்கான நாட்டின் மிகப்பெரிய பல்வகை சரக்கு போக்குவரத்து முனையத்தை ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் இன்று ஹரியானா மாநிலம் மானேசரில் தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய திரு வைஷ்ணவ், 45 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள இந்த சரக்கு முனையம், 4 லட்சத்து 50 ஆயிரம் வாகனங்களை கையாளும் வசதி கொண்டது என்றும் தெரிவித்தார்.

மேலும், 108 பல்வகை சரக்கு போக்குவரத்து முனையங்கள் விரைவில் பயன்பாட்டுக்கு வரும் என்றும் அவர் கூறினார்.

ரயில்வேத்துறையை மேம்படுத்த மத்திய அரசு எடுத்துவரும் பல்வேறு நடவடிக்கைகளை குறிப்பிட்ட அமைச்சர், ரயில் பயணிகள் அனைவருக்கும் சுகாதாரமான கட்டமைப்பு கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் கூறினார்.

<<<<<<>>>>>>

எதிர்வரும் அமர்நாத் யாத்திரைக்கான பாதுகாப்பு முன்னேற்பாடுகள் குறித்து மத்திய உள்துறை செயலர் திரு கோவிந்த் மோகன் தலைமையில் இன்று ஸ்ரீநகரில் உயர்மட்ட ஆலோசனை நடைபெற்றது.

இதில், ஜம்மு காஷ்மீர் தலைமைச்செயலர், காவல்துறை தலைவர், ராணுவத்தின் மூத்த அதிகாரிகள், புலனாய்வு அமைப்பினர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

அமர்நாத் யாத்திரைக்கான பாதுகாப்பு செயல் திட்டத்தை இறுதி செய்வது குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மற்றும் சவால்களை எதிர்கொள்ளும் வகையில், பாதுகாப்பு கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான ஆலோசனைகள் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

நடப்பாண்டுக்கான அமர்நாத் யாத்திரை அடுத்த மாதம் 3-ஆம்தேதி தொடங்கி, ஆகஸ்ட் மாதம் 9-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

<<<<<<>>>>>>

இந்தியா — பிரான்ஸ் இடையிலான 8-ஆவது கூட்டு ராணுவ பயிற்சி பிரான்சின் Larzac-ல் நாளை தொடங்குகிறது.

சக்தி என்று அழைக்கப்படும் இந்த பயிற்சி அடுத்த மாதம் ஒன்றாம் தேதிவரை நடைபெறவுள்ளது.

இந்திய தரப்பில் ஜம்மு காஷ்மீர் ரைஃபிள் துணை ராணுவப்படையை சேர்ந்த 90 வீரர்கள் பங்கேற்க உள்ளனர்.

பிரான்ஸ் நாட்டை சேர்ந்த 90 ராணுவ வீரர்களும் இப்பயிற்சியில் பங்கேற்கிறார்கள்.

<<<<<<>>>>>>

இனி,

மக்களின் மனதை வென்ற மத்திய அரசின் திட்டங்கள் . . .

சேவை, நல்லாட்சி, ஏழைகளின் நலன் என்பதை தாரக மந்திரமாக கொண்டு, கடந்த 11 ஆண்டுகளாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு செயல்பட்டு வருவதன் காரணமாக நாடு பெரிய அளவிலான மாற்றங்களை கண்டுள்ளது.

இதுதொடர்பான செய்தித் தொகுப்பில் இன்று டிஜிட்டல் இந்தியா திட்டத்தால் ஏற்பட்டுள்ள மாற்றம் குறித்த தகவல்கள் இடம்பெறுகின்றன.

## (வாய்ஸ் பைட் – 94 செகண்ட்ஸ்)

<<<<<<>>>>>>

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு, நாடுமுழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழகத்தின் நாகப்பட்டினத்தில் பள்ளி மாணவ, மாணவியர் ஒரே இடத்தில் தொடர்ந்து ஒருமணிநேரம் யோகாசனங்களை மேற்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

ஈரான் - இஸ்ரேல் இடையிலான போர் நீடித்துவரும் நிலையில், இருநாடுகளிலும் பொதுமக்கள் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர்.

இஸ்ரேலில் டெல் அவிவ், ஜெருசலேம் நகரங்களில் ஏவுகணை தாக்குதல் நடைபெற்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேல் ராணுவத்திற்கு பதிலடி தரும் வகையில், ஈரான் இரண்டு ஏவுகணைகளை அந்நாட்டின் மத்திய மற்றும் வடக்கு பகுதியில் ஏவி தாக்குதல் நடத்தியுள்ளது.

இஸ்ரேல் தாக்குதலை நிறுத்தாவிட்டால் பெரிய அளவில் பதில் தாக்குதல் நடத்தப்போவதாக ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேற்கு ஈரான் பகுதியில் உள்ள நிலைகளை இஸ்ரேல் ராணுவம் தாக்கியுள்ளதாக அந்நாடு தெரிவித்துள்ளது.

இதனிடையே, இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஈரானின் போர் தளபதி Ali Shadmani கொல்லப்பட்டு விட்டதாகவும் இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் விடுத்துள்ள செய்தியில், ஈரான் - இஸ்ரேல் இடையிலான சண்டை நிறுத்தம் விரைவில் முடிவுக்குவரும் என தாம் எதிர்நோக்கியுள்ளதாகவும், இதற்கான முன்னெடுப்புகளை அமெரிக்கா மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

தைவானில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் வைதேகி சௌத்ரி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில், 7-5, 6-0 என்ற செட் கணக்கில், ஜப்பானின் Junri Namigata –வை வென்றார்.

-------------

ஸ்பெயினில் நடைபெற்ற சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் அங்கிதா ரெய்னா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 6-2, 6-1 என்ற நேர் செட்டுகளில், ரோமானியாவின் Menuha Popovici –வை வென்றார்.

---------------

துனிஷியாவின் Monastir-ல் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Dev Javia காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 3-6, 6-3, 6-3 என்ற செட் கணக்கில், மால்டாவின் Liam Delicata –வை வென்றார்.

<<<<<<END>>>>>>